ஹிதாயா

மகளிர் இஸ்லாமியக் கல்லூரி

A Unit of Vellore Educational Empowerment Trust

HIDAAYAH ISLAMIC COLLEGE FOR GIRLS
VELLORE
اَللّٰهُمَّ اِنَّا نَسْئَلُكَ عِلْمًا نَافِعًا
O Allah, we ask You for Beneficial knowledge.

சதக்கத்துல் ஜாரியாவுக்கான முதலீடு

ஹிதாயா மகளிர் இஸ்லாமியக் கல்லூரிக்கான கட்டிடம்

எண்.17, மதார் சாஹெப் தெரு, R.N.பாளையம், வேலூர்-632001, வேலூர் மாவட்டம்.

செல்:9843708538, 9789768220, 9344866444

بسم الله الرحمن الرحيم

HIDAAYAH ISLAMIC COLLEGE FOR GIRLS
اللهم إنا نسئلك علما نافعا
O Allah, we ask You for Beneficial knowledge
VELLORE

كلية الهداية للبنات

ஹிதாயா

மகளிர் இஸ்லாமியக் கல்லூரி

வேலூர்

ஆலிமா பட்டம்

மூன்றாண்டு ஆலிமா பட்டப்படிப்பு

வருடத்திற்கு இரண்டு செமஸ்டர்கள்

'ஹாதிய்யா" ஆலிமா பட்டத்துடன் சான்றிதழ்

விடுதி வசதி உண்டு





முஸ்லிம்களுக்கு - குறிப்பாக பெண்குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பது நமது பொறுப்பாகும். பெண்கல்வி தொடர்பான இந்த முதன்மைப் பொறுப்பை அலட்சியப்படுத்தியதால் முஸ்லிம் சமுதாயம் எண்ணற்ற சிக்கல்களுக்கு ஆளாகியுள்ளது.

"மனிதனின் முதல் பள்ளிக்கூடம் தாயின் மடிதான்'' என்பார்கள். ஆனால் அத்தகைய சிறப்பு வாய்ந்த பெண்களைக் கல்வியறிவு பெறுவதிலிருந்து விலக்கி வைத்து விட்டனர், அதன் விளைவாக பெண்கள் பல்வேறு பிரச்சனைகளில் சிக்கிக்கொண்டுள்ளனர். தங்களின் முக்கியத்துவத்தையும் அவர்கள் அறிந்துகொள்ளவில்லை,

மார்க்கரீதியான பொறுப்புகளைப் பற்றிய கவலையும் அவர்களிடம் காணப்படவில்லை. இப்படிப்பட்ட சூழலில், அவர்களின் மடியில் வளரும் தலைமுறையும் தன் பொறுப்பிலிருந்து பாராமுகமாகி அல்லாஹ்வை விட்டும் மார்க்கத்தை விட்டும் விலகி, அனைத்து விதமான ஒழுக்கக்கேடுகளிலும் சிக்கிச்சீரழிந்துகொண்டிருக்கிறது.

"ஒரு பெண் கல்வி பெறுவது ஒரு பரம்பரையே கல்வி பெறுவதற்கு இணையானது'' என்பார்கள். ஆம். உண்மை. ஒரு பெண் சீரான கல்வியையும் சரியான வழிகாட்டுதலையும் பெற்றுவிட்டாள் எனில், ஒட்டுமொத்த குடும்பமும் நல்வழியிலும், நேர்வழியிலும் நடைபோடும்.

இறையருளால், இந்த உயரிய நோக்கத்திற்காக சில விழிப்புணர்வுள்ள நல்லுள்ளங்கள் முன்வந்துள்ளனர்.

வேலூரில் சிறப்பான முறையில் பெண்களுக்கு மார்க்கக் கல்வியுடன் கூடிய நவீன கல்வியை வழங்கும் வகையில் 'குல்லியத்துல் ஹிதாயா' எனும் பெயரில் மகளிர் கல்லூரி அமைக்க முடிவு செய்துள்ளனர்.

@mzainul.khakim

குர்ஆன், ஹதீஸ், ஒழுக்கம், நவீன பாடங்கள், திறன் சார்ந்த கல்வி, ஆளுமை மேம்பாடு, அனைத்தும் ஒருங்கே இணைந்த முழுமையான புதுமையான பாடத்திட்டம்





- அரபு மொழி
- குர்ஆன்
- தஜ்வீத்
- மனனம்
- குர்ஆனை அணுகும் முறை
- ஹதீஸ் பாடங்கள்
- பிக்ஹுச் சட்டங்கள்
- நபிமார்களின் வரலாறு
- ஒழுக்கப் பயிற்சி
- இஸ்லாமிய வரலாறு

இத்துடன் +1, +2 அரசு அங்கீகாரம் பெற்ற எளிமையான பாடத்திட்டங்கள்

திறன் மேம்பாட்டு வகுப்புகள்

ஆளுமை மேம்பாட்டு வகுப்புகள்

அரசு சான்றிதழ் டிப்ளமோ படிப்புகள்

Vocational Institution of Open Schooling (NIOS)

விரைவில் சேர்க்கப்படும் படிப்புகள்

1. Certificate in Computer Application
2. Certificate in DTP
3. Fashion Designing
4. B.A. Islamic Studies
5. Nursing Courses
6. Paramedical Courses

விடுதி வசதி உண்டு



கல்லூரியின் இலக்கு
VISION

மார்க்க ஞானமும், அறிவாற்றலும் மிக்க பெண் ஆளுமைகளை உருவாக்கி அவர்களின் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பயனுள்ளவர்களாக மாற்றுதல், தனிப்பட்ட குடும்ப சமூக வாழ்வில் முன்மாதிரிகளாக அவர்களை செதுக்குதல், பன்முக ஆற்றலும், திறமையும் மிக்க மக்கள் சேவையையும் நலனையும் கருத்தில் கொள்கின்ற இளைய தலைமுறைப் பெண்களை உருவாக்குதல்.

கல்லூரியின் குறிக்கோள்
MISSION

உலகக் கல்வி, மார்க்கக் கல்வி இரண்டையும் கவனத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட நவீன பாடத்திட்டத்தில் கற்ற கல்வியின் மூலம் மாணவிகள் சுய வலிமை பெறுவதற்கும், மிகச்சிறந்த மார்க்கப்பற்றுள்ளவர்களாய் மாணவிகள் திகழ்வதற்கும், வழிகாட்டும் தொலைநோக்குடனான செயல் திட்டம், வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் இஸ்லாமிய வழிகாட்டுதல்கள், சமூகக் கட்டமைப்பில் பெண்களை பங்கு பெறச்செய்யும் தெளிவான பாதை.

கல்லூரியில் சேருவதற்கான விதிமுறைகள்

- 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்
- திருக்குர்ஆன் ஓதத் தெரிந்திருக்க வேண்டும்.

ஹிதாயா

மகளிர் இஸ்லாமியக் கல்லூரி

A Unit of Vellore Educational Empowerment Trust

எண்.17, மதார் சாஹெப் தெரு, R.N.பாளையம்,
வேலூர்-632001, வேலூர் மாவட்டம்.
9843708538, 9789768220, 9344866444

அல்லாஹ்வுக்கு அழகிய கடன் கொடுப்போர் (உங்களில்) யார் உளர்?
(அப்படிக் கடன் கொடுத்தால்) அல்லாஹ் அதனைப் பல மடங்குகளாக்கி
அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பான். அல்லாஹ்தான் (செல்வத்தைக்)
குறைக்கவும் பெருக்கவும் செய்கின்றான். நீங்கள்
அவன் பக்கமே திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள் (2:245)

அல்லாஹ்வுக்கு அழகான கடனை யார் கொடுப்பார்கள்
அதை அல்லாஹ் அவர்களுக்குப்
பல மடங்கு பெருக்கித் தருவான். அவர்களுக்கு
கண்ணியமான கூலியும் உண்டு. (57:11)

வேண்டுகோள்

அன்புள்ள சகோதர சகோதரிகளே
அஸ்ஸலாமு அலைக்கும்

இது இஸ்லாத்தின் பாதையில் ஓர் உன்னதமான நோக்கமாகும்,
இது மிகவும் பலன் அளிக்கக் கூடியது. இந்தத் தொலைநோக்குத் திட்டத்தை
நடைமுறைப்படுத்த உங்களின் பங்களிப்பு எங்களுக்குத் தேவை

எங்கள் கல்லூரியின் உள்கட்டமைப்பில் முதலீடு செய்வதன் மூலம்,
சமூகத்திற்கு நேர்மறையான பங்களிப்பை வழங்கும் எதிர்காலத்
தலைவர்களின் வளர்ச்சியை நீங்கள் ஆதரிக்கிறீர்கள்

எங்களின் முயற்சியில் பங்களிக்கவும் மேலும் அறியவும்
எங்களை தொடர்புக்கொள்க:

செல்:9843708538, 9789768220, 9344866444

VELLORE EDUCATIONAL EMPOWERMENT TRUST
Union Bank of India, Vellore Branch
A/c. No.: 001421010000123
IFS Code : UBIN0900141